## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனி – 2017

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்வாண்டினது கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடும் காசுப் பாய்ச்சலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன. என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைக்குட்படுதல் என்பன மேற்கூறியவாறு அமையும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்றும், எனது பரீசீலனைகளின் மூலம் கம்பனியானது முறையான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணியுள்ளதாகக் தோற்றுவதுடன்,

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காணப்படும் தேவைகளுக்கு அமைவாக உள்ளதென்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 16 முதல் 51 வரையிலான பந்திகளின் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது பயன்தரு காலப் பகுதியை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 380,600 கிரயமுடைய நிழற் பிரதி இயந்திரமொன்று தொடர்ந்து பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவை 08 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கேற்ப மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

#### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,683,524 கிரயமுடைய வாகனங்களுக்கும் ரூபா 550,491 கிரயமுடைய வீட்டுத் தளபாடங்களுக்குமுரிய திரண்ட தேய்மானம் முறையே ரூபா 17,603,895 மற்றும் ரூபா 625,738 என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டதன் காரணமாக, கிரயத்திலும் கூடுதலாக அச் சொத்துக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தேய்மானம் ரூபா 995,618 ஆகும்.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 தொடக்கம் 2010 வரை பெற வேண்டிய நிறுத்தி வைத்த பணமான ரூபா 1,118,392 மற்றும் பெற வேண்டிய பெறுமதி சேர் வரியான ரூபா 1,340,623 என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டபோதும், அவற்றிற்குரிய மூலப் பதிவேடுகள் இருக்காததுடன் அவற்றை அறவிடுவது நிச்சயமற்றதாகவும் இருந்தது.

(ஆ) வெளிநாட்டில் சேவைகளுக்காகச் சென்று அங்கு காலமாகிய இலங்கையர்களின் பொருட்டு 2013 முதல் 2016 வரையான காலப்பகுதியின்போது பெறப்பட்ட மரண இழப்பீட்டுத் தொகையான ரூபா 6,484,111 கூட்டுத் தொகையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(இ) 2006/2007 ஆம் ஆண்டுகளில் கொரியாவில் வேலை செய்வதற்காகச் சென்ற 824 இலங்கையர்களிடமிருந்து அறவிடப்பட்ட திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 41,200,000 வைப்பில் ரூபா 16,460,000 கூட்டுத் தொகையானது மீளாய்வாண்டின் இறுதியளவிலும் குறித்த நபர்களுக்குச் செலுத்தப்பட வேண்டியதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) ஓராண்டிற்கு மேலாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக உள்ள ரூபா 7,728,284 மீதியை தீர்வு செய்வதற்கும் ரூபா 2,938,020 பெறுமதியுடைய கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09.12 ஆம் பந்தி | பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் முறையான அங்கீகாரமின்றி முகவர் கம்பனியின் பதவியணியினருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் காப்புறுதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் பொருட்டு தவணைப் பணமாக 2011 முதல் 2017 வரையான காலப்பகுதியின்போது ரூபா 5,368,296 கம்பனியின் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | (i) கம்பனியின் தலைவரது மாதாந்த எரிபொருள் படி 170 லீட்டர் வரம்பிற்கு உட்பட வேண்டுமாயினும், 2016 மே மாதம் முதல் 2017 டிசெம்பர் வரையான காலப்பகுதியின்போது அவ்வரம்பிற்கு அதிகமாக ரூபா 470,274 பெறுமதியான |

4176 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அம் மேலதிக எரிபொருளுக்கு வரிசை அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ii) தொகுதிப் போக்குவரத்து வசதிகளுக்கு மாத்திரமே அருகதையுடைய கம்பனியின் 3 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் 03 மாதங்களின் போது ரூபா 77,220 எரிபொருள் படியாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிப் பெறுபேறு ரூபா 103,278 நிகர இலாபமாகும். அதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 2,008,515 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ஏற்பட்ட நலிவு ரூபா 1,905,237 ஆகும். கம்பனியின் பிரதான வருமானமாகிய கொரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் தொழிலாளர்களை அனுப்புகையில் மருத்துவ பரிசோதனைக்கு அவர்களை உட்படுத்துவதால் சம்பாதிக்கும் வருமானம் ரூபா 5,429,080 குறைவடைந்ததும் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நடாத்திய மருத்துவ நிலையத்தின் தரகுப் பணமாக முன்னைய ஆண்டில் ரூபா 10,693,006 பெறப்பட்டிருந்தபோதும், அந்த வருமானத்தை மீளாய்வாண்டில் இழந்தமையாலும் காப்புறுதி இழப்பீட்டைச் செலுத்துவதில் ரூபா 3,538,260 அதிகரிப்பு ஏற்பட்டதும் மேற்படி பற்றாக்குறைக்கான பிரதான காரணிகளாகும்.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

கம்பனியின் 05 பிரதான வருமான வழிகளில் 02 மீளாய்வாண்டின்போது முற்றாக இழப்பிற்குள்ளாகியமையால் கம்பனியின் வியாபார நடவடிக்கைகளால் சம்பாதிக்கப்படும் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 17.38 மில்லியன் குறைவடைந்திருந்ததுடன், ஒட்டுமொத்த வருமானத்தில் 25 சதவீதம் நிலையான வைப்பு வட்டியாலான சம்பாத்தியத்தை உள்ளடக்கியிருந்தது. இதற்கமைய, கம்பனி தனது வியாபர நடவடிக்கைகளை விரிவடையச் செய்து புதிய வருமான வழிகளில் ஈடுபடக் கவனம் செலுத்தாதுவிடின், எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நெருக்கடிக்குள்ளாகும் அபாயம் நிலவுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நடவடிக்கைகளும் மீளாய்வும்

1985 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராக பணி புரியும் ஆற்றல் கிடைக்கப் பெற்றிருந்தது. அவ்வதிகாரத்திற்கமைய, அதற்குப் பூரண உரிமையுடனான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பிரத்தியேக கம்பனி அமைக்கப்பட்டுமிருந்தது. கம்பனியின் அமைப்பு விதிகளுக்கமைய வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாகவும் வெளிநாடு செல்லும் தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பது உள்ளடங்கலான துறையுடன் விரிவானவாறு நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியதாகவிருந்தது. அவ்வாறே, இத் துறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய ஒரேயொரு அரச நிறுவனமும் இக்கம்பனி ஆகும். எனினும், இப் பலம் (Strength) மற்றும் வியாபாரச் சந்தர்ப்பங்கள் (Business opportunity) என்பவற்றை அதிகளவில் பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டிலும் கம்பனி தவறி இருந்தமை பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தகவல்களுக்கமைய, மீளாய்வாண்டின்போது இலங்கைக்கு 310,786 வேலை வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றபோதும், கம்பனி அதில் 427 சந்தர்ப்பங்களில் அதாவது 0.14 சதவீதம் மாத்திரமே வெளிநாடு செல்வதற்கு வசதியளித்திருந்தது. அவ்வாறே, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பெறப்பட்ட 09 வேலை வாய்ப்புக் கட்டளைகளின் எண்ணிக்கை 09 குறைவடைந்தும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் 2211 குறைவடைந்தும் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது ஜோர்தான், சிங்கப்பூர், பஹ்ரெயின் போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் முறையே 140, 100, 60 என்பனவாகும். இவற்றிற்குப் பொருத்தமான தொழிலாளர்களை அனுப்பி வைப்பதற்குக் கம்பனியால் இயலாதிருந்தது. அவ்வாறே, மாலை தீவிலிருந்து கிடைக்கப் பெற்ற 58 தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களில் 55 க்கும் தொழிலாளர்கள் அனுப்பப்படவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டில் கட்டார், குவைத், ஓமான் போன்ற நாடுகளிலிருந்து வேலை வாய்ப்புக் கட்டளைகள் கிடைக்கப்பெற்றபோதும், அவற்றிற்குத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டிராததுடன், மீளாய்வாண்டில் அந் நாடுகளிலிருந்து வேலை வாய்ப்புக் கட்டளைகள் எதுவுமே கிடைக்கப் பெறவுமில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட 806 பேர்களது நேரடி மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் வெளிநாடுகளுக்குச் சென்றோரது எண்ணிக்கையைத் தவிர, கம்பனியாலேயே கண்டறியப்பட்ட வேலைகளுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டோரது எண்ணிக்கை 44 ஆகும். அது கம்பனியால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டோரின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் ஏறக்குறைய 5 சதவீத குறைந்த மட்டத்தில் அமைந்திருந்தது.

(உ) கம்பனியால் வேலைகளுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளிலிருந்து கிரமாகக் குறைவடைந்திருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் 13 ஆகவிருந்த அந்த எண்ணிக்கை மீளாய்வாண்டளவில் 05 ஆகக் குறைவடைந்திருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டின்போது 32 வகை வெளிநாட்டு வேலைகளுக்கு தொழிலாளர்கள் வெளிநாடு சென்றிருந்தபோதும், 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளின்போது அது 07 வகை மற்றும் 10 வகையான வேலைகளாகக் குறைவடைந்திருந்தன. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அக்குறை 78 சதவீதமாகும்.

(எ) கம்பனியின் பிரதான நோக்கமாகிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டின் பொருட்டு வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,349,683 மற்றும் ரூபா 2,525,249 கூட்டுத் தொகையாகச் செலவிடப்பட்டு 10 சந்தர்ப்பங்களில் கம்பனியின் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாக்களை மேற்கொண்டிருந்தனர். எனினும், எதிர்பார்த்தவாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கவில்லை. அவ்வாறே, அவ்வாறு பெறப்பட்டதாகச் குறிப்பிடப்பட்ட 3,616 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களிலும் 1,213 க்கு மாத்திரமே தொழிலாளர்களை அனுப்பி வைக்கக் கூடியதாகவிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இஸ்ரேல் நாட்டிற்கு விவசாயத்துறை ஊழியர்களை வழங்குவது சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இஸ்ரேல் நாட்டிற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்குமிடையேயான உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியினூடாக வெளிநாடு செல்லும் ஊழியர்கள் குறித்த வேலைக் காலம் முடிவடைவதையடுத்து இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்படுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் கம்பனி மேற்கொள்ள வேண்டும். எனினும், முன்னைய 04 ஆண்டுகளின்போது வெளிநாடு சென்ற 1043 தொழிலாளர்களில் 92 பேர் வேலைக் காலம் முடிவடைந்ததன் பின்னரும் தமது நாட்டிற்குத் திரும்பியிராதபோதும், அவர்களைத் திருப்பி அழைப்பதற்கு கம்பனி மீளாய்வாண்டு இறுதி வரை தவறியிருந்தது.

(ii) வெளி நாடு செல்லும் ஊழியர்களுடன் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புச் கம்பனி ஏற்படுத்தும் உடன்படிக்கைப் பிரகாரம், பொறுப்பேற்கும் பணிகள், கடப்பாடுகள், கடமையை நிறைவேற்றுவது புறக்கணிக்கப்படுமிடத்து வேலை வழங்குபவர்களாலும் இழப்பீட்டிற்குரியவர்களாலும் குறித்த பிணை முறிக்கு ஒப்பான தொகையை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கம்பனிக்கு வழங்க வேண்டும். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட 92 பேரில் 70 பேர் தொடர்பாகத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுப்பதற்கு 01 முதல் 04 ஆண்டு கால தாமதம் ஏற்பட்டிருந்தது. 19 பேர்கள் தொடர்பாக கணக்காய்வுத் தினமான 2018 யூன் 12 ஆந் திகதியளவிலும் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதற்கமைய, ஏறக்குறைய ரூபா 28,500,000 பெறுமதியுடைய பிணை முறியைக் கம்பனி பெறக்கூடியதாகவிருந்த சந்தர்ப்பம் நழுவியிருந்ததுடன், மேலே குறிப்பிடப்பட்டவாறு உடன்படிக்கை மீறலின் காரணமாக இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் அரசாங்கத்திடமிருந்து பெறக் கூடிய வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை இழக்கக் கூடிய அபாயமும் நிலவுவது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் அமைப்பு விதிமுறைகளினது மூல நோக்கங்களை நிறைவேற்றுகையில் சட்ட ரீதியாக அறவிடப்படக் கூடிய கட்டணத்திற்குப் புறம்பாக முறையான

அங்கீகாரமின்றியும் குறிப்பிடப்பட்ட விதி முறைகளின்றியும் தனிப்பட்ட ரீதியில் வேலையைத் தேடி வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்ப்புடையவர்களுக்குத் தேவையான வேலை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைத் தேடும் நபர்களது தகவல்களைக் கொண்ட தரவுகளை மூலப் பதிவுகளில் உள்ளடக்குவதன் மூலம் மீளாய்வாண்டின்போது கம்பனி சம்பாதித்த வருமானத்தின் கூட்டுத் தொகை ரூபா 6,733,143 ஆகும்.

(இ) கம்பனியானது தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்திய உடன்படிக்கைப் பிரகாரம், 2013 ஆம் ஆண்டில் வாடகைக் கட்டிடம் ஒன்றில் மருத்துவ நிலையம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. வேலையின் பொருட்டு கொரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் செல்வோருக்கு மருத்துவ அறிக்கைகளை வழங்குவது நிறுவனத்தின் பிரதான பணியாக இருந்தது. கம்பனியுடனான உடன்படிக்கையின் பிரகாரம் முகவர் நிலையம் வியாபார நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து, உடன்படிக்கை முடிவடைவதைக் கம்பனிக்கு அறிவித்ததன் பின்னர் வியாபார நிலையத்திலிருந்து வெளியேற வேண்டுமாயினும், 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதி வியாபார நடவடிக்கைகளைத் நிறுத்துமாறு கம்பனிக்கு அறிவித்திருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 ஏப்ரல் 24 ஆந் திகதியளவிலும் கம்பனியை விட்டு வெளியேறியிராததால் அக்காலப்பகுதிக்கான வாடகையாக ரூபா 1,320,000 கூட்டுத் தொகையைக் கம்பனி கட்டிட வாடகையாக செலுத்த வேண்டியேற்பட்டது. அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்து கொள்வதற்கு 2018 யூலை 30 ஆந் திகதியளவிலும் கம்பனியால் இயலாதிருந்தது.

(ஈ) வேலை தேடி வெளிநாடு செல்பர்கள் தமது வேலைக் காலத்தின்போது பூரணமாக செயலிழந்தோ, அரைப் பங்கு செயழிலந்தோ அல்லது மரணமடைந்தோ போகுமிடத்து இழப்பீட்டைப் பெற்றுத் தருவதற்கும் இலங்கைக்கு அவர்களை அழைத்து வருவதற்கும் ஏற்படும் செலவினத்தை மீளளிப்புச் செய்யும் நோக்கில்'' ஆறுதல் காப்புறுதி நிதியம்' எனும் பெயரில் காப்புறுதி திட்டமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரத்தியேக கம்பனி, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பும் பணியகம் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒன்றாக இணைந்து அமுலாகியிருந்தன.

இதன் பொருட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் கம்பனியும் செய்து கொண்ட காப்புறுதி உடன்படிக்கைக் காலம் 02 ஆண்டுகள் ஆனதுடன் இலங்கை வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் கம்பனிக்கிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி மேவுகை காலப்பகுதி 02 ஆண்டுகளிற்கு மேலதிகமாக 03 மாத கால சலுகையும் வழங்கப்பட்டிருந்தது. காப்புறுதித் திட்டத்தின் கீழ் சலுகைக் காலத்தின்போது இழப்பீடு வழங்குவது தொடர்பாக நிச்சயமான தீர்மானம் எதுவுமின்றி 2015 மார்ச் தொடக்கம் அக் காப்புறுதித் திட்டத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கீழ் கொண்டு வந்ததுடன், அதன் நிமித்தம் கம்பனியின் பிரதான நடவடிக்கையொன்றைக் கம்பனி இழந்துமிருந்தது. எனினும், மேலதிக காலத்தின்போது காப்புறுதியாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டிற்கான பொறுப்பை கம்பனியே ஏற்கவேண்டியேற்பட்டமையால் கம்பனி தன்வசமிருந்த நிலையான வைப்பை மீளப் பெற்று அக் காலப்பகுதியின்போது ரூபா 4,400,000 கூட்டுத்தொகையை வழங்கியிருந்தது.

(உ) 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதியன்று இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 08 ஊழியர்களது வானூர்திச் சீட்டுக்களைக் குறித்த தினத்திற்கு முன்னரே கொள்வனவு செய்ய முடியாது போனமையால் ஏற்பட்ட தாமதத்தால் அந் நபர்களை மீண்டும் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்த வேண்டியேற்பட்டது. அதற்கான ரூபா 121,500 மேலதிக தொகையை கம்பனியே செலுத்தியிருந்தது.

## 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் கம்பனியிடம் 06 வங்கி நடைமுறைக் கணக்குகள் இருந்தன. அவற்றுள் 3 மாத்திரமே ஆண்டின்போது செயற்பட்டவாறிருந்தன. வங்கிக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் அவ்வங்கிக் கணக்குகளில் இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 12,599,467 ஆகும். மீளாய்வாண்டின் மார்ச் முதல் டிசெம்பர் வரை நிலவிய மீதி ரூபா 08 மில்லியன் தொடக்கம் ரூபா 21 மில்லியன் வரையாகும். இவ்வாறு பயன்படுத்தப்படாத நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் நடைமுறைக் கணக்குகளில் மிகையான மீதிகள் பேணப்படுவது என்பன நிதி முகாமைத்துவத்திலுள்ள நலிவாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் கம்பனியினது பெயரில் 08 சேமிப்புக் கணக்குகள் இருந்தன. அதில் ரூபா 164,165 மீதி கூட்டுத் தொகையுடைய 05 கணக்குகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கமும் ரூபா 2,100 மீதியையுடைய ஒரு கணக்கு 2016 ஆம் ஆண்டு தொடக்கமும் செயலற்றவாறிருந்தன.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் நோக்கங்களை ஈடேற்றக் கூடியவாறு பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கும் 9.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றம் பதவியுயர்வு நடைமுறைகளைத் தயாரிப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) தெரிவுச் செவ்வைக்குள்ளான கடந்த 06 ஆண்டுகளின்போது உயர் மற்றும் மத்திய தர முகாமைத்துவ பதவிகளில் தொடர்ச்சியாக வெற்றிடங்கள் நிலவியதுடன், அப்பதவிகளுக்கு இரண்டாம் நிலை மற்றும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமித்து வெற்றிடங்களை நிரப்பாதிருந்தமை சாதாரண நடைமுறையாக உருமாறியிருந்தமை பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டதுடன் நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கு இது தடையாக அமையலாம் எனவும் தென்பட்டது.

(i) பொது முகாமையாளர் பதவி 2014 தொடக்கம் வெற்றிடமாக இருந்தது. 07 சந்தர்ப்பங்களில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுமிருந்தனர். ஒவ்வொரு உத்தியோகத்தரும் அப்பதவியில் கடமையாற்றிய அதி கூடிய காலம் 17 மாதங்கள் ஆகும்.

(ii) நிதி முகாமையாளர் பதவி 2017 ஏப்ரல் தொடக்கம் 2018 மார்ச் வரை வெற்றிடமாக இருந்தது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2018 யூன் மாதமளவிலும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(iii) வியாபார மேம்பாட்டு முகாமையாளர் பதவி 2016 தொடக்கம் வெற்றிடமாக இருந்தது. பணியகத்தின் உத்தியோகத்தர்கள் 04 தடவைகளில் பதில கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்பார்த்தவாறு வியாபார நடவடிக்கை மேம்பாடு ஏற்படாமையால் அப்பதவிக்குரிய பொறுப்பு முறையாக நிறைவேறியதா என்பது கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாகியது.

(iv) மனித வள முகாமையாளர் பதவி 06 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தது. பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் 2016 செப்டெம்பர் 05 தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

(v) சிறாப்பர் பதவியில் நிரந்தமாக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையிலான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நெடுங்காலமாக அறவிடப்படாதிருக்கும் கடன் மீதியை அறவிடாமை மற்றும் செயலாற்றவாறுள்ள கடன் கொடுத்தோர் மீதிகளைத் தீர்வு செய்யாமை |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | கம்பனி பெறக் கூடியதாகவுள்ள வியாபாரச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதற்கு திட்டமிட்ட நடவடிக்கைகளை அமுலாக்காமை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | கம்பனி அதிகளவு பயன் பெறக்கூடியவாறு வங்கி நடைமுறைக் கணக்குகளையும் நிலையான வைப்புகளையும் முறையான முகாமைத்துவத்துடன் பேணுதல். |
| (ஈ) மனித வள முகாமைத்துவம் | தகைமையுடைய உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆட்சேர்க்காமை மற்றும் மனித வள முகாமைத்துவத்தை சக்தி மிக்கதாக்குதல். |